RNI-N0: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-96 | 13 ஏப்ரல் | ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## ''அரசியலுக்காக கலவரத்தை தூண்டாதீர்கள்'' வக்பு சட்ட எதிர்ப்பு போராட்டத்துக்கு மம்தா கண்டனம்

கொல்கத்தா, ஏப்.13

வக்பு சட்டத்துக்கு எதிராக மேற்கு வங்கத்தில் வன்முறைச் சம்பவங்கள் நடந்ததை அடுத்து, அனைவரும் அமைதி காக்குமாறு அம்மாநில முதல்வர் மம்தா பானர்ஜி வேண்டுகோள் விடுத்துள்ளார்.



இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், அனைத்து மதத்தினருக்கும் எனது மனமார்ந்த வேண்டுகோள், தயவுசெய்து அமைதியாகவும் நிதானமாகவும் இருங்கள். மதத்தின் பெயரால் எந்த மதச்சார்பற்ற நடத்தையிலும் ஈடுபடாதீர்கள்.

ஒவ்வொரு மனித உயிரும் விலைமதிப்பற்றது, அரசியலுக்காக கலவரங்களைத் தூண்டிவிடாதீர்கள். கலவரம் செய்பவர்கள் சமூகத்திற்கு தீங்கு விளைவிக்கிறார்கள்.

வக்பு சட்டத்தை நாங்கள் உருவாக்கவில்லை. இந்தச் சட்டத்தை மத்திய அரசு இயற்றியது. எனவே, போராட்டத்தில் ஈடுபடுபவர்கள், தாங்கள் விரும்பும் பதிலை மத்திய அரசிடமிருந்துதான் பெற வேண்டும்.

இந்த விஷயத்தில் எங்கள் நிலைப்பாட்டை நாங்கள் தெளிவுபடுத்தியுள்ளோம் இந்த சட்டத்தை நாங்கள் ஆதரிக்கவில்லை. இந்தச் சட்டம் நமது மாநிலத்தில் செயல்படுத்தப்படாது. அப்படி இருக்க, இந்தக் கலவரம் எதற்கானது?

கலவரத்தைத்தூண்டுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்போம் என்பதையும் நினைவில் கொள்ளுங்கள். நாங்கள் எந்த வன்முறைச் செயலையும் மன்னிப்பதில்லை.

சில அரசியல் கட்சிகள், அரசியல் ஆதாயத்திற்காக மதத்தை தவறாகப் பயன்படுத்த முயற்சிக்கின்றன. அவர்களின் வற்புறுத்தலுக்கு அடிபணியாதீர்கள்.

மதம் என்றால் மனிதநேயம், கருணை, நாகரிகம் மற்றும் நல்லிணக்கம் என்றே நான் நினைக்கிறேன். அனைவரும் அமைதியையும் நல்லிணக்கத்தையும் பேணட்டும் இதுவே எனது வேண்டுகோள் என்று தெரிவித்துள்ளார்.

இதனிடையே, மேற்கு வங்கத்தின் முர்ஷிதாபாத்தில் வக்பு சட்டத்துக்கு எதிரான வன்முறையில் ஈடுபட்டதாக 110க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## மாநில மசோதாக்கள் மீது 3 மாதங்களுக்குள் முடிவு குடியரசுத் தலைவருக்கு சுப்ரீம் கோர்ட் காலக்கெடு

புதுடெல்லி, ஏப்.13

மாநில மசோதாக்கள் மீது 3 மாதங்களுக்குள் முடிவு எடுக்கப்பட வேண்டும் என குடியரசு தலைவருக்கு காலக்கெடு நிர்ணயித்துள்ள உச்ச நீதிமன்றம், முடிவெடுப்பதற்கு முன் உச்ச நீதிமன்றத்தை அணுகுவது விவேகமானது என்று தெரிவித்துள்ளது.



தமிழக அரசு அனுப்பிய மசோதாக்கள் மீது முடிவெடுக்காமல் ஆளுநர் காலம் தாழ்த்துவதாக அவருக்கு எதிராக தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில் கடந்த 8ம் தேதி தீர்ப்பளித்த உச்ச நீதிமன்றம், இது தொடர்பாக ஆளுநருக்கு காலக்கெடு நிர்ணயித்து உத்தரவிட்டது. வழக்கை விசாரித்த நீதிபதிகள் ஜே.பி. பர்திவாலா, ஆர்.மகாதேவன் ஆகியோர் அடங்கிய அமர்வு, "சட்டப்பேரவை நிறைவேற்றிய ஒரு மசோதாவை நிறுத்திவைத்து குடியரசுத் தலைவருக்கு அனுப்ப ஆளுநர் முடிவு செய்தால் அது தொடர்பாக அமைச்சரவை ஆலோசனைப்படி ஒரு மாத காலத்துக்குள் ஆளுநர் முடிவு எடுக்க வேண்டும்.

அமைச்சரவையின் ஆலோசனைக்கு புறம்பாக அந்த மசோதாக்களை நிறுத்தி வைப்பதாக இருந்தால், ஆளுநர் அதிகபட்சமாக 3 மாதங்களுக்குள் அவற்றை திருப்பி அனுப்ப வேண்டும். அதேவேளை அந்த மசோதாக்கள் மாநில சட்டப்பேரவையில் மறுநிறைவேற்றம் செய்யப்பட்டு மீண்டும் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டால் அந்த மசோதாக்கள் மீது ஒரு மாதத்துக்குள் ஒப்புதல் அளிக்க வேண்டும். மசோதாக்கள் குடியரசு தலைவ ருக்கு ஆளுநரால் பரிந்துரைக்கப்படுமானால் அவற்றின் மீது குடியரசு தலைவர் 3 மாதங்களுக்குள் முடிவெடுக்க வேண்டும்'' என தீர்ப்பளித்தது.

மசோதாக்கள் மீது சட்ட ஆலோசனையை உச்ச நீதிமன்றத்திடம் கேட்க குடியரசுத் தலைவருக்கு மட்டுமே அதிகாரம் உள்ளது. மாநில ஆளுநர்களுக்கு கிடையாது. இதை சுட்டிக்காட்டியுள்ள உச்ச நீதிமன்ற நீதிபதிகள், "ஆளுநர்கள் மசோதாக்களை குடியரசு தலைவருக்கு பரிந்துரை செய்தால், அவர் உச்ச நீதிமன்றத்திடம் ஆலோசனை பெறுவது விவேகமானது. அரசியலமைப்பின் பிரிவு 143 இன் கீழ் ஒரு மசோதா குறித்த சட்ட ஆலோசனையை குடியரசு தலைவர், உச்ச நீதிமன்றத்திற்கு பரிந்துரைப்பது கட்டாயம் அல்ல. என்றபோதிலும், விவேகமான ஒரு நடவடிக்கையாக, குடியரசுத் தலைவர் உச்ச நீதிமன்றத்தின் கருத்தைப் பெற வேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம். ஆளுநர் மசோதாக்களை அரசியலமைப்பு நீதிமன்றங்களுக்கு பரிந்துரைப்பதற்கான வழிமுறை மாநில அளவில் இல்லாததால் இது மிகவும் அவசியமானது.'' என்று தீர்ப்பில் தெரிவித்துள்ளனர்.

மேலும், "ஒரு மசோதா சட்டமாக மாறுவதற்கு முன்பு அதன் அரசியலமைப்பு செல்லுபடியாகும் தன்மை குறித்து கருத்து தெரிவிக்கும் அதிகாரம் அரசியலமைப்பு நீதிமன்றங்களுக்கு உண்டு. ஒரு தவறான மசோதா சட்டமாக மாறினால் இயற்கையாகவே பல்வேறு சிக்கல்கள் ஏற்படும். எனவே, முன்கூட்டியே அத்தகைய ஒரு சட்டம் இயற்றப்படாமல் தடுக்கப்படுமானால் அது நேரத்தையும் பொது வளங்களையும் மிச்சப்படுத்தும். மேலும், பொருத்தமான திருத்தங்களை சட்டமன்றம் மேற்கொள்வதற்கும் வாய்ப்பும் கிடைக்கும்.'' என்றும் நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில் தெரிவித்துள்ளனர்.

## பாஜகவுடன் அதிமுக கூட்டணி வைத்தது ஏன்? வைகைச்செல்வன் விளக்கம்

காஞ்சிபுரம், ஏப்.13

அதிகார பலம் மற்றும் பண பலத்துடன் இருக்கும் திமுகவை வீழ்த்த வலுவான கூட்டணி அமைக்க வேண்டும் என்று பல்வேறு தரப்பில் இருந்து வந்த கோரிக்கையைத் தொடர்ந்து பாஜகவுடன் அதிமுக கூட்டணி அமைத்திருப்பதாக முன்னாள் அமைச்சர் வைகைச்செல்வன் தெரிவித்தார்.

காஞ்சிபுரம் மாநகராட்சி அலுவலகம், ஏகாம்பரநாதர் கோயில் அருகே உள்ள பகுதிகளில் தண்ணீர் பந்தல் திறப்பு விழா நடைபெற்றது. இந்த தண்ணீர் பந்தலை அதிமுகவின் முன்னாள் அமைச்சர் வைகைச்செல்வன் திறந்து வைத்தார். அப்போது செய்தியாளர்களிடம் பேசிய அவர், "முன்னாள் முதல்வர் பழனிச்சாமி தலைமையில் அமைந்த பாஜக கூட்டணி மக்கள் நலன் சார்ந்து செயல்படும். அதிமுக தனது கொள்கைகளை கூட்டணிக்காக என்றும் விட்டுக் கொடுக்காது, கூட்டணி என்பது வேறு கொள்கை என்பது வேறு. திமுக பாசிச ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறது. பண பலம், அதிகார பலம் என்று மிருக பலத்தோடு இருக்கும் திமுகவை வீழ்த்த கூட்டணி அமைப்பது காலத்தின் கட்டாயம். அதனால் பாஜகவுடன் கூட்டணி அமைத்துள்ளோம். திமுகவில் இருக்கும் அதன் கூட்டணிக் கட்சியினர் கொத்தடிமைகளாக இருந்து வருகின்றனர். கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய விவகாரம், தொழிற்சாலை பிரச்சினைகளை தீர்க்க முடியவில்லை'' என்றார்.

மேலும் ஆளுநருக்கு எதிரான உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு குறித்த செய்தியாளரின் கேள்விக்கு பதிலளித்த அவர், "நீதியின் உச்சமான உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை தலை வணங்கி ஏற்க வேண்டும். ஜெயலலிதாவின் 199196 ஆட்சி காலத்தில் பல்கலை கழகங்களில் முதல்வரே வேந்தராக இருக்க வேண்டுமென சட்டமன்றத்திலே தீர்மானம் நிறைவுற்ற முற்பட்ட போது அந்த தீர்மானத்தை எதிர்த்தது திமுக. முதல்வரின் கோரிக்கை, உச்சநீதி மன்ற தீர்ப்பில் நிறைவேறிவிட்டது என இருமாப்பு கொள்கிறார்கள். அன்றே சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றி இருந்தால், இந்தப் பிரச்சினை இருந்து இருக்காது. திமுகவின் இரட்டை வேட நாடகத்தை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்'' என்றார்.

## 'மனப்பூர்வமாக மன்னிப்பு கேட்கிறேன்' அமைச்சர் பொன்முடி

சென்னை, ஏப்.13

"நீண்ட காலம் பொது வாழ்க்கையில் உள்ள எனக்கு இதுபோன்ற தடுமாற்றம் ஏற்பட்டது குறித்து நான் மிகவும் வருந்துகிறேன். பலருடைய மனதைப் புண்படுத்தும் வகையில் இப்பேச்சு அமைந்து விட்டது குறித்தும், அவர்கள் தலைகுனியும் சூழல் ஏற்பட்டது குறித்தும் நான் மிகவும் மனம் வருந்துகிறேன்.மனம் புண்பட்ட அனைவரிடமும் நான் பேசிய பேச்சுக்கு மீண்டும் மீண்டும் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்,'' என்று அமைச்சர் பொன்முடி கூறியுள்ளார்.



இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: "தந்தை பெரியார் திராவிடர் கழகம் நடத்திய ஓர் உள் அரங்கக் கூட்டத்தில், தகாத பொருளில் தவறான சொற்களைப் பயன்படுத்தி நான் பேசிய பேச்சுக்கு மனப்பூர்வமாக மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.இந்தத் தகாத கருத்தை நான் பேசியது குறித்து உடனடியாக மனப்பூர்வமாக வருந்தினேன். நீண்ட காலம் பொது வாழ்க்கையில் உள்ள எனக்கு இதுபோன்ற தடுமாற்றம் ஏற்பட்டது குறித்து நான் மிகவும் வருந்துகிறேன்.

பலருடைய மனதைப் புண்படுத்தும் வகையில் இப்பேச்சு அமைந்து விட்டது குறித்தும், அவர்கள் தலைகுனியும் சூழல் ஏற்பட்டது குறித்தும் நான் மிகவும் மனம் வருந்துகிறேன்.மனம் புண்பட்ட அனைவரிடமும் நான் பேசிய பேச்சுக்கு மீண்டும் மீண்டும் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்.'' என்று அவர் கூறியுள்ளார்.

முன்னதாக, நேற்று திமுக துணைப் பொதுச் செயலாளர் பொறுப்பில் இருந்து பொன்முடி விடுவிக்கப்படுவதாக மு.க.ஸ்டாலின் அறிவித்தார். இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில், "கழக துணைப் பொதுச் செயலாளர் க.பொன்முடி அவர் வகித்து வரும் துணைப் பொதுச்செயலாளர் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்படுகிறார்.'' எனத் தெரிவித்திருந்தார். தொடர்ந்து அந்தப் பதவியில் திருச்சி சிவாவையும் நியமித்தார்.

மேலும், தமிழக முதல்வர் ஸ்டாலினை அமைச்சர் பொன்முடி நேரில் சந்தித்தார். ஆனால் அந்த சந்திப்பின் விவரம் ஏதும் வெளியிடப்படவில்லை. பொன்முடியை அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்படலாம் எனக் கூறப்பட்டு வந்த நிலையில், 'மனம் புண்பட்ட அனைவரிடமும் நான் பேசிய பேச்சுக்கு மீண்டும் மீண்டும் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்.' என பொன்முடி கூறியுள்ளார்.

## "பெங்களூரு போன்ற பெரிய நகரத்தில்..." பாலியல் வன்கொடுமை குறித்த கர்நாடக அமைச்சரின் பேச்சால் சர்ச்சை

பெங்களூரு, ஏப்.13

பெங்களூரு போன்ற ஒரு பெரிய நகரத்தில் பாலியல் சம்பவங்கள் அங்கும் இங்கும் நடக்கத்தான் செய்யும் என்று கர்நாடக உள்துறை அமைச்சர் பரமேஸ்வரா கூறி இருப்பது சர்ச்சையை ஏற்படுத்தி இருக்கிறது.



பெங்களூருவில் பாரதி லே அவுட் பகுதியில் கடந்த 3ம் தேதி அதிகாலை 2 பெண்கள் தெருவில் நடந்து சென்று கொண்டிருந்தபோது அவர்களை பின் தொடர்ந்து வந்த நபர் ஒருவர், ஒரு பெண்ணிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இது குறித்த சிசிடிவி காட்சிகள் வைரலாகியதை அடுத்து, வீதியில் நடப்பதற்கும் பாதுகாப்பு இல்லாத நிலை பெங்களூருவில் ஏற்பட்டுள்ளதாக பலரும் கருத்துக்களை பதிவிட்டுள்ளனர்.

இந்நிலையில் இது குறித்த செய்தியாளரின் கேள்விக்கு பதில் அளித்த உள்துறை அமைச்சர் பரமேஸ்வரா, "பெங்களூரு போன்ற ஒரு பெரிய நகரத்தில் இங்கும் அங்குமாக இதுபோன்ற சம்பவங்கள் நடக்கத்தான் செய்யும். சட்டப்படி என்ன நடவடிக்கை எடுக்க முடியுமோ அந்த நடவடிக்கை எடுக்கப்படும். இதுபோன்ற சம்பவம் நடக்கும் போதெல்லாம் அது பொதுமக்களின் கவனத்தை ஈர்க்கிறது.

விழிப்புடன் இருக்குமாறும், ரோந்துப் பணிகளை தொடர்ந்து பின்பற்றுமாறும், கண்காணிப்பை தீவிரப்படுத்துமாறும் பெங்களூரு காவல் ஆணையர் தயானந்தாவிடம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன். மழை மற்றும் குளிரைப் பொருட்படுத்தாமல் போலீசார் 24 மணி நேரமும் தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர். அதனால்தான் பெங்களூருவில் அமைதி நிலவுகிறது'' என்று கூறினார்.

அமைச்சர் பரமேஸ்வராவின் இந்த பதில், சர்ச்சையை ஏற்படுத்தி இருக்கிறது. பாலியல் வன்கொடுமையை நியாயப்படுத்துவதுபோல அமைச்சரே பேசலாமா என பலரும் கேள்வி எழுப்பி உள்ளனர்.

இதற்கு முன், பெங்களூருவில் நடந்த கூட்டு பாலியல் வன்கொடுமை சம்பவம் குறித்த கேள்விக்கு பதில் அளித்த மாநில முதல்வர் சித்தராமையா, "பாஜக ஆட்சிக் காலத்தில் பாலியல் வன்கொடுமைகள் நடக்கவில்லையா? பாலியல் வன்கொடுமை சம்பவங்கள் நடக்கக்கூடாது, பெண்கள் பாதுகாக்கப்பட வேண்டும், ஆனால் சமூகத்தில் எப்போதும் கெட்டவர்கள் இருக்கிறார்கள்'' என்று கூறினார்.

முதல்வரின் இந்த கருத்தை கடுமையாக விமர்சித்த பாஜக எம்எல்ஏ அஸ்வத் நாராயண், இதை வெட்கக்கேடான நியாயப்படுத்தல் என்று விமர்சித்திருந்தார்.

## 'வக்பு' வன்முறை | மேற்கு வங்கத்தின் முர்ஷிதாபாத் கலவரத்தில் 2 பேர் உயிரிழப்பு: போலீஸ் தகவல்

கொல்கத்தா, ஏப்.13

வக்பு திருத்த சட்டத்துக்கு எதிராக மேற்கு வங்கத்தின் முர்ஷிதாபாத்தில் உள்ள சம்சர்கஞ்ஜில் ஏற்பட்ட வன்முறையில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளதாக போலீஸார் தெரிவித்துள்ளனர்.



மேற்கு வங்கத்தின் முர்ஷிதாபாத் மாவட்டத்தில் வக்பு திருத்த சட்டத்துக்கு எதிரான போராட்டங்களுக்கு மத்தியில் ஏற்பட்டுள்ள வன்முறை மோதல்களால் அங்கு பதற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த வன்முறை தொடர்பாக எதிர்க்கட்சியான பாஜக குற்றம்சாட்டியதைத் தொடர்ந்து, வக்பு திருத்தச் சட்டம் மேற்கு வங்கத்தில் அமல்படுத்தப்படாது என்று தெரிவித்திருக்கிறார்.

இதனிடையே முர்ஷிதாபாத்தில் வெள்ளிக்கிழமை ஏற்பட்ட கலவரம் தொடர்பாக 118 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக போலீஸார் தெரிவித்துள்ளனர். மூத்த போலீஸ் அதிகாரி ஒருவர் கூறுகையில், வன்முறையில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர்'' என்று தெரிவித்தார்.

கலவரம் குறித்து எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள மாநில முதல்வர் மம்தா, "ஒவ்வொரு மனித உயிரும் விலைமதிப்பற்றது, அரசியலுக்காக கலவரங்களைத் தூண்டிவிடாதீர்கள். கலவரம் செய்பவர்கள் சமூகத்திற்கு தீங்கு விளைவிக்கிறார்கள்.

வக்பு சட்டத்தை நாங்கள் உருவாக்கவில்லை. இந்தச் சட்டத்தை மத்திய அரசு இயற்றியது. எனவே, போராட்டத்தில் ஈடுபடுபவர்கள், தாங்கள் விரும்பும் பதிலை மத்திய அரசிடமிருந்துதான் பெற வேண்டும்.

இந்த விஷயத்தில் எங்கள் நிலைப்பாட்டை நாங்கள் தெளிவுபடுத்தியுள்ளோம் இந்த சட்டத்தை நாங்கள் ஆதரிக்கவில்லை. இந்தச் சட்டம் நமது மாநிலத்தில் செயல்படுத்தப்படாது. அப்படி இருக்க, இந்தக் கலவரம் எதற்கானது? கலவரத்தைத் தூண்டுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்போம் என்பதையும் நினைவில் கொள்ளுங்கள். நாங்கள் எந்த வன்முறைச் செயலையும் மன்னிப்பதில்லை.'' என்று தெரிவித்துள்ளார்.

முர்ஷிதாபாத்தில் வன்முறை தொடங்கியது எப்படி?: மேற்குவங்கத்தின் சில பகுதிகளில் வக்பு சட்டத்துக்கு எதிராக நடந்த போராட்டங்கள் பதற்றத்தை ஏற்படுத்தியது. வன்முறையாளர்கள் வாகனங்களுக்குத் தீ வைத்தனர். இதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. கலவரக்காரர்களைக் கட்டுப்படுத்த முயன்றதில் சில போலீஸார் காயமடைந்தனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

மூத்த போலீஸ் அதிகாரி ஒருவர் கூறுகையில், "வெள்ளிக்கிழமை தொழுகைக்கு பின்பு முஸ்லிம்கள் ஒன்று கூடி வக்பு சட்டத்துக்கு எதிராக போராட்டம் நடத்தியதால் பதற்றம் ஏற்பட்டது. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், சம்சர்தஞ்சிலுள்ள டாக்பாங்லோவிலிருந்து சுதிர் சஜுர் மோர் இடையில் உள்ள தேசிய நெடுஞ்சாலை 12ஐ மறித்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஒரு போலீஸ் வாகனத்தின் மீது கற்களை எறிந்ததில் போராட்டம் வன்முறையாக மாறியது. இந்த கலவரத்தில் 10 போலீஸார் காயம் அடைந்தனர். கட்டுக்கு அடங்காக கூட்டத்தை கட்டுப்படுத்த போலீஸார் தடி அடி நடத்த வேண்டி இருந்தது. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வெடி குண்டு போன்ற பொருளை வீசியதால் போலீஸார் கண்ணீர் புகைகுண்டை பயன்படுத்த வேண்டி இருந்தது'' என்று தெரிவித்தார்.

சனிக்கிழமை நடந்த வன்முறை முர்ஷிதாபாத்தின் துலியன் பகுதி வரை பரவியது. இங்கு நடந்த துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்தார். இதனிடையே மேற்கு வங்க பாஜக தலைவர் சுகந்த மஜும்தார், திரிணமூல் காங்கிரஸ் அரசு முர்ஷிதாபாத்தில் சட்டத்தின் ஆட்சியை அமல்படுத்தி அமைதியை நிலைநாட்ட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

மாலை தந்தி



# பெருங்களத்தூர் வடக்கு பகுதி 49வது வார்டு சண்முகம் சாலையில் தாகம் தீர்க்கும் தண்ணீர் பந்தல் திறப்பு விழா



தாம்பரம் ஏப்.13

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் வடக்கு பகுதி வார்டு எண் 49 சண்முகம் ரோடு பகுதி கழக செயலாளர் 4வது மண்டல குழுத்தலைவர் டி.காமராஜ் அவர்கள் ஏற்பாட்டில் தாகம் தீர்க்கும் தண்ணீர் பந்தல் திறப்பு விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில்

தாம்பரம் சட்டமன்ற உறுப்பினரும்தாம்பரம் மாநகர செயலாளருமான எஸ்.ஆர். ராஜா அவர்கள் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு நீர் மோர், ரோஸ் மில்க், இளநீர், பழங்கள் வழங்கினார். உடன் மேயர் க.வசந்தகுமாரி, ஜா.ரவிக்குமார், இரா. செல்வகுமார் ,ஆர்.செல்வ குமார், ச.ராஜேஷ், எம்.சீனிவாச குமார், கோ.ராஜேந்திரன், ஆர்.சீனா, எம்.ரமேஷ், எம்.வினோத், ர.அகஸ்டின், சித்திரம் வாசுதேவன், எம்.ரமேஷ், எஸ்.கார்த்திக், வி.தங்கராஜ், குத்தூஸ்கனி, சே.மைக்கேல்ராஜ், பி.வி.ஏகாம்பரம், கா.மு.சூர்யா, விக்கி(எ)யுவராஜ், வாட்டர் மோகன், ஜெ.நரேஷ், என்.மதன், இ.நவீன்குமார், ஆர்.ஹரி, மகளிர் அணி ஜி.சரஸ்வதி, எம்.மோகன லட்சுமி, ஆர்.லட்சுமி, இ.குமார், குருமணி, நரேன், பிரவீன்குமார், அ.கணபதி, உமாபதி, லோகேஸ்வரன், டேவிட் லிவிங்ஸ்டன், பி.விஜய், சார்லஸ், மு.புருஷாத்தமன், ஜஷ்வந்த் மற்றும் மாநகர, பகுதி கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



சிவகங்கை மாவட்டம் காரைக்குடி, பிள்ளையார்பட்டி, கோட்டையூர், குன்றக்குடி உட்பட பல்வேறு பகுதிகளிலும் நடந்த கோயில் திருவிழாவின் போது தொடர்ந்து செயின் பறிப்பு சம்பவங்கள் நடைபெற்றது. நடைபெற்ற செயின் சம்பவங்கள் குறித்து குன்றக்குடி காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்தனர். கண்காணிப்பு கேமராக்களின் அடிப்படையில் சார்பு ஆய்வாளர் பழனிகுமார் தலைமையில் காவல்துறை யினர் தேடிவந்த நிலையில் இதில் ஈடுபட்டது கோவில்பட்டி மந்திதோப்பு பகுதியைச் சேர்ந்த ஹரி கிருஷ்ணன் மனைவி முத்தழகு( 36) முருகன் மனைவி அலமேலு( 55), என தெரியவந்தது. அலமேலு விபத்து ஒன்றில் சிக்கி இறந்த நிலையில், முத்தழகை போலீசார் கைது செய்து அவரிடமிருந்து 28 பவுன் நகையை காவல்துறையினர் மீட்டனர்.

# அருள்மிகு நவசக்தி சுயம்பு துர்க்கை அம்மன் திருக்கோவிலில் 34 ஆம் ஆண்டு பால்குடம் ஊர்வலம் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் பங்கேற்பு



குரோம்பேட்டை ஏப்13

சென்னை குரோம்பேட்டை லட்சுமிபுரம் ஏரிக்கரை பகுதியில் உள்ள அருள்மிகு நவசக்தி சுயம்பு துர்க்கை அம்மன் திருக்கோயில் 34 ஆம் ஆண்டு பங்குனி உத்திர பால் திருமுழுக்கு திருவிழா பால்குடம் ஊர்வல நிகழ்ச்சி தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ் தலைமையில் நடைபெற்றது,

நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் பால்குடம் எடுத்து அம்மனை வழிபட்டனர். முன்னதாக குரோம்பேட்டை பாலாஜி மருத்துவமனை அருகில் இருந்து புறப்பட்டு லட்சுமிபுரம் ஏரிக்கரை பகுதியில் உள்ள அருள்மிகு நவசக்தி சுயம்பு துர்க்கை அம்மன் திருக்கோவிலில் வந்தடைந்தது பின்னர் சிறப்பு பூஜை செய்து அம்மனுக்கு பக்தர்கள் கொண்டு வந்த பாலினை அபிஷேகம் செய்தனர், பால்குட ஊர்வலத்தை தொடங்கிவைத்து திருக்கோயில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானமும் பால்குடம் எடுக்கும் பக்தர்களுக்கு பிரசாதனத்துடன் கூடிய பிரசாதப்பை வழங்கும் ஏற்பாட்டினை ஸ்ரீ பாலாஜி மருத்துவ கல்லூரி தாளாளர்கள் மருத்துவர் ஜெ ராஜலட்சுமி இளமாறன் குடும்பத்தினர்கள் பங்கேற்று பக்தர்களுக்கு பிரசாதப்பை மற்றும் அன்னதானம் வழங்கி சிறப்பித்தனர்,

# சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட கோவிலம்பாக்கத்தில் அ.தி.மு.க சார்பில் நீர், மோர், பந்தல் திறப்பு



கோவிலம்பாக்கம் ஏப்13

செங்கல்பட்டு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக் குட்பட்ட கோவிலம்பாக்கம் ஊராட்சியில் நீர்,மோர், பந்தல் திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. முன்னாள் முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி, கே. பழனிச்சாமி ஆணைக்கிணங்க, கழக மாணவரணி துணைச் செயலாளர், கோவிலம்பாக்கம் ஊராட்சி மன்ற துணைத் தலைவர், வழக்கறிஞர். மணிமாறன் மற்றும் கோவிலம்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர், கீதா மணிமாறன் தலைமையில் நீர், மோர், பந்தலை முன்னாள் அமைச்சர் பா. வளர்மதிரிப்பன் வெட்டி மகிழ்ச்சியுடன் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் சோழிங்கநல்லூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், சென்னை புறநகர் மாவட்ட கழகச்செயலாளருமான, கே.பி. கந்தன், கழக அம்மா பேரவை துணைச் செயலாளர், பரங்கிமலை ஒன்றிய செயலாளருமான, பெரும்பாக்கம் .ராஜசேகர் ஆகியோர் முன்னிலையில் பொதுமக்களுக்கு அ.தி.மு.க சின்னம் பதித்த நிழற்குடை இலவசமாக வழங்கி, இளநீர், தர்பூசணி, வெள்ளரிக்காய் , பலவகையான பழங்கள், கூழ் மற்றும் நீர், மோர், கலர் குளிர்பானங்களை வழங்கினர். இந்நிகழ்ச்சியில் சோழிங்கநல்லூர் தெற்கு பகுதி கழக செயலாளர் வி. குமார் உள்ளிட்ட மாநில, மாவட்ட, பகுதி, ஒன்றிய, வட்ட கழக, ஊராட்சி மற்றும் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.





சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் வட்டத்துக்குட்பட்ட கருதுப்பட்டி கிராமத்தில் தனியார் நிகழ்ச்சிக்கு பங்கேற்பதற்காக வருகை தந்துள்ள தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவியை வேலு நாச்சியார் விருந்தினர் மாளிகையில் நேற்று சிவகங்கை மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜீத் மலர் கொத்து வழங்கி வரவேற்பு அளித்தார்.உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆஷிஷ் ராவத்,தேவகோட்டை சார் ஆட்சியர் ஆயுஷ் வெங்கட் வட்ஸ், கூடுதல் கண்காணிப்பாளர் கலை கதிரவன் உடனிருந்தனர்.

# ஓ.பி.சி.பிரிவு சார்பில் சிறந்த ஆளுமை விருதினை பாஜக. ஓ.பிசி. அணி தேசிய தலைவர் லட்சுமணன் மற்றும் நயினார் நாகேந்திரன் வழங்கினர்




சென்னை ஏப்ரல் 13

சென்னை கிண்டியில் உள்ள ராயல் லீ மெரிடியன் ஓட்டலில் ஓபிசி அணி சார்பில் தமிழ்நாட்டில் ஓ.பி.சி. பிரிவில் சிறந்து விளங்கும் ஆளுமைகளை தேர்ந்தெடுத்து விருதுகள் வழங்கும் விழா வியாழக்கிழமை மாலை நடைபெற்றது.

விழாவிற்கு ஓ.பி.சி. அணி ஒருங்கிணைப்பாளர் டாக்டர் ராஜ்குமார் தலைமை தாங்கினார். இதில் சிறப்பு விருந்தினராக பாஜக ஓ.பி.சி அணியின் தேசிய தலைவர் லட்சுமணன் எம்பி., மற்றும் பாஜக சட்டமன்ற உறுப்பினர் நயினார் நாகேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அப்போது விழாவில் பேசிய நயினார் நகேந்திரன் கூறும்போது,

ஓ.பி.சி. ஆணையம் 1953 ஆண்டு ஏற்பட்டது. ஆனால் காங்கிரஸ் அரசால் பின்னர் நிராகரிக்கப்பட்டது. தற்போது பிரதமர் நரேந்திரமோடியால் தான் ஒ.பி.சி ஆணையத்திற்கு அங்கீகாரம் வழங்கபட்டு ஆணையம் புத்துயிர் பெற்று சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

கச்சதீவை இலங்கைக்கு கொடுத்தது யார் என்று தமிழக மக்களுக்கு நன்றாக தெரியும். ஆனால் யார் இலங்கைக்கு தாரை வார்த்தனர் என்பதை சொல்ல மறந்து தற்போது மீட்க வேண்டும் என குரல் கொடுத்து வருகின்றனர்.

தற்போது கட்சதீவை மீட்க வேண்டும் என தீர்மானத்தில் கூட மீனவர்கள் நலனை கருத்தில் கொண்டு பாஜக உள்ளிட்ட அனைத்து கட்சிகளும் ஆதரவு அளித்தது. ஓபிசி பிரிவினர் ஒரே குடையின் கீழ் ஒற்றுமையாக செயல்படவேண்டும். வரக்கூடிய அரசு எந்த அரசாக இருந்தாலும் ஒபிசி மக்களுக்கு யார் உதவி செய்கின்றார்களோ, ஒபிசி மக்களை யாரெல்லாம் ஆதரிக்கின்றார்களோ, அவர்களுக்கு வரக்கூடிய தேர்தலில் நம் ஆதரவை தெரிவிக்கவேண்டும் என பேசினார்.

அதனை தொடர்ந்து சிறந்த ஆளுமைகான ஒ.பி.சி. விருதுகள் வழங்கப்பட்டது. இதில் முன்னாள் தலைமை செயலாளர் ராம்மோகன்ராவ், சினிமா தயாரிப்பாளர் கலைபுலி தானு, திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் ஈஸ்வரன் உள்ளிட்ட 32 பேருக்கு சிறப்பு விருந்தினர்கள் பாஜக ஓ.பி.சி அணியின் தேசிய தலைவர் லட்சுமணன் எம்பி., மற்றும் பாஜக சட்டமன்ற உறுப்பினர் நயினார் நாகேந்திரன் ஆகியோர் விருதுகள் வழங்கி கவுரவித்தனர்.





தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் குலாலர்பாளையம் பங்காருநாயக்கர் மேற்குத் தெரு ஜ.கா.நி. மெட்ரிக் பள்ளி எதிரில் அமைந்துள்ள ஸ்ரீ ஆறுபடையான் பக்த சபை முருகன் கோவிலில் பங்குனி உத்திர திருக்கல்யாண திருவிழா வெகு விமர்சையாக நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து மாலை 6 மணிக்குமேல் திருவிளக்கு பூஜையும் அதனை தொடர்ந்து சிற்றுண்டி வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியின் தலைமை .வடமலை ராஜையபாண்டியன்,ஜமீன்தார் , முன்னிலை. முருகேசன் அருள்செல்வி, ஸ்ரீ ஆறுபடையான் பக்தசபை முருகன் கோவில் தலைவர் முருகன், செயலாளர் முருகவேல், பொருளாளர், தங்கம், துணைத்தலைவர் காமாட்சி, துணைச் செயலாளர் சன்னாசி மற்றும் ஸ்ரீ ஆறுபடையான் திருவாதிரை தங்கரத குழு பழனி பாதயாத்திரை போடி. அது சமயம் பக்த கோடிகளும் பொதுமக்களும் ஆன்மீக நண்பர்களும் முருகனின் அருளைப் பெற்று சென்றனர்.




மதுரை மாநகராட்சி மண்டலம் 1 வார்டு எண்.4 பட்டிமேடு பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள நியாயவிலை கடையினை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார் அருகில் மேயர் இந்திராணி பொன்வசந்த் , ஆணையாளர் சித்ரா விஜயன், துணை மேயர் தி.நாகராஜன் , மண்டலத் தலைவர் வாசுகி , மாமன்ற உறுப்பினர் நந்தினி மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.




ஐஸ்வர்யம் அறக்கட்டளையின் கீழ் செயல்படும் புன்னகை பூக்கள் சிறப்பு பள்ளியில் இரண்டாம் ஆண்டு விழா சிறப்பாக நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினர்களாக அரவிந்த் கண் மருத்துவமனையின் இயக்குனர் துளசிராஜ் ,சக்திகாட்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் ஷியாம் பிரகாஷ் குப்தா , ஆனந்த் எக்ஸ்போர்ட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் ஆனந்த் கணேசன் , மதுரை உயர்நீதிமன்ற கிளை மூத்த வழக்கறிஞர் சாமிதுரை மற்றும் சமூக ஆர்வலர் மணிகண்டன் ஆகியோர் கலந்து கொண்டனர். சிறப்பு குழந்தைகளுக்கான கலை நிகழ்ச்சி , விளையாட்டுபநடைப்பெற்றது. போட்டிகளில்வெற்றிபெற்றவர்களுக்கு சிறப்பு விருந்தினர்களால் பரிசு வழங்கப்பட்டது.இவ்விழாவில் பெற்றோர்கள், குழந்தைகள் பொதுமக்கள் என அனைவரும் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.





சென்னை சென்ட்ரல் மற்றும் பூந்தமல்லி ரயில் நிலையங்களுக்கு நேற்று வெடிகுண்டு மிரட்டல் விடுத்த மர்ம நபர் காவல் துறையினர் தேடி வருகின்றனர் இந்நிலையில் மானாமதுரை இருப்புப் பாதை காவல் சார்பு ஆய்வாளர் தனுஷ்கோடி தலைமையில் தனிப்பிரிவு சிறப்பு சார்பு ஆய்வாளர் ராஜா மற்றும் ரயில்வே பாதுகாப்பு படையினர் ஒருங்கிணைந்து ரயில் நிலையத்தில் உள்ள இருசக்கர வாகனம் காப்பகம் ,ஆட்டோ, ரயில்வே ஸ்டேஷன், ரயில் பெட்டியில் வெடிகுண்டு சோதனை நடத்தினர்.

# பழனியில் பங்குனி உத்திரத்தை முன்னிட்டு தமிழக வெற்றி கழகத்தின் சார்பாக ஒரு நாள் முழுவதும் அன்னதானம் வழங்கல்



பழனி ஏப்13

திண்டுக்கல் மாவட்டம் பழனி தண்டாயுதபாணி திருக்கோயில் பங்குனி உத்திரத்தை முன்னிட்டு பாளையம் அருகே மாவட்டச் செயலாளர் கார்த்திக் ராஜா ஆணைக்கிணங்க மற்றும் கழக இணைச் செயலாளர் விஜய் சிவா மாவட்ட செயற்குழு உறுப்பினர் பாலன். ஆகியோர் ஏற்பாட்டில் பழனி பாதயாத்திரை வரும் பக்தர்களுக்கு நீர் மோர்.அன்னதானமும். ஒரு நாள் முழுவதும் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது இவ்விழாவில் நகரச் செயலாளர் மிதுன். மாவட்ட நிர்வாகிகள் நகர நிர்வாகிகள் சார்பணி நிர்வாகிகள் மகளிர் அணி நிர்வாகிகள் என பலர் கலந்து கொண்டனர் இந்நிகழ்வில் தொடர்ந்து செய்தியாளர் சந்திப்பில் விழா ஏற்பாட்டினை செய்திருந்த மாவட்ட செயற்குழு உறுப்பினர் பாலன் வருகின்ற சட்டமன்ற தேர்தலில் அனைத்து இடங்களிலும் வெற்றி பெற வேண்டும். தமிழக வெற்றி கழகத்தின் நிறுவனத் தலைவர் விஜய் நீண்ட ஆரோக்கியத்துடனும் இருக்க வேண்டும் பாதயாத்திரை வரும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கி வருகிறோம் எனக் கூறினார்.

# பெரியகுளம் அருகே கள்ளிப்பட்டியில் புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மாபெரும் புத்தகத் திருவிழா





பெரியகுளம் ஏப்13

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே தெ.கள்ளிப்பட்டியில் புரட்சியாளர் அம்பேத்கர் 134 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மூன்றாம் ஆண்டு மாபெரும் புத்தக திருவிழா மற்றும் ஜெய்பீம் அம்பேத்கர் படிப்பகம் அடிக்கல் நாட்டு விழாவை தேனி நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்செல்வன் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்து பேசுகையில் "ஜெய்பீம் அறக்கட்டளையானது கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது. தேனி மாவட்டம் தென்கரை பேரூராட்சி கள்ளிப்பட்டியில் இது அடிகோலாக அமைந்துள்ளது. இந்த கிராமத்தில் உள்ள நாயகம் நடுநிலைப்பள்ளி மாணவர்களுக்கு ஜெய்பீம் அறக்கட்டளையின் சார்பில் மாணவர்கள் அமர்வதற்கு முதற்கட்டமாக சுமார் 47 ஆயிரம் மதிப்பீட்டில் ஆறு இருக்கைகள் வழங்கியது மன நிறைவாக உள்ளது. இதேபோல் தேனி மாவட்டத்தில் மட்டுமல்லாமல் தமிழகம் முழுவதும் உள்ள கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் இதுபோன்ற படிப்பகத்தை அதிகமாக உருவாக்கி மாணவர்களுக்கு தரமான கல்வியை கொடுக்க வேண்டும் என்ற வி.சி.க தலைவர் தொல் திருமாவளவன் அவர்களின் கனவை நிறைவேற்றும் வகையில் ஜெய்பீம் அறக்கட்டளை நிர்வாகி வழக்கறிஞர் விஜி மணிவாசகம் படிப்பகம் அமைப்பதற்கு தனது சொந்த 6 செண்ட் நிலத்தை வழங்கியது சிறப்பு வாய்ந்ததாகும்.கல்வி கற்க வாய்ப்புகள் இல்லாத காலத்தில் பல பட்டங்களை பெற்று எளிய மனிதனாலும் கல்வி கற்க இயலும் என்பதை நிரூபித்துக் காட்டியவர் புரட்சியாளர் அம்பேத்கர். அவருடைய பிறந்தநாள் அன்று இதுபோன்ற கல்வி அறக்கட்டளைகள் மற்றும் படிப்பகங்கள் பல உருவாக வேண்டும் " என்று பேசினார். பெரியகுளம் உட்கோட்ட காவல்துறை துணை கண்காணிப்பாளர் நல்லு குத்துவிளக்கு ஏற்றினார். பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் சரவணக்குமார் முதல் பிரதியை வெளியிட வி.சி.க தேனி கிழக்கு மாவட்ட செயலாளர் ரபீக் பெற்றுக்கொண்டார்.முன்னதாக உதவி பேராசிரியர் அமிர்தராஜ் வரவேற்புரையாற்றினார்.

ஜெய்பீம் 2.0 அறக்கட்டளை ஒருங்கிணைப்பு குழு நிர்வாகி கனல்விழி, தென்கரை பேரூர் கழக தி.மு.க செயலாளர் பாலமுருகன், வி.சி.க. மாநில மகளிர் அணி துணைச் செயலாளர் கோமதி ஆனந்தராஜ்,வடகரை வாசகர் வட்ட தலைவர் மணி கார்த்திக்,திராவிட கழக பொதுக்குழு உறுப்பினர் அன்புக்கரசன், வி.சி.க.பெரியகுளம் ஒன்றிய செயலாளர் ஆண்டி, தி.மு.க. மாவட்ட பிரதிநிதி கருப்பையா,நாயகம் நடுநிலை பள்ளி உதவி தலைமை ஆசிரியர் செல்லத்துரை ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் தென்கரை பேரூராட்சி தலைவர் நாகராஜ்,நாயகம் நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் ராஜகுமாரி,மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர், கார்த்திக், தி.மு.க.மாவட்ட பிரதிநிதிகள் செல்லப்பா,சீனிவாசன், பழனிமுருகன், அனைத்து சமூக நல்லிணக்க ஒருங்கிணைப்பாளர் காமராஜ் பாண்டியன்,வழக்கறிஞர்கள் காமாட்சி(எ)கரிகாலன்,சுதாகர், மார்ஷல் ,திராவிடர் கழக ஒன்றிய செயலாளர் ஆதி தமிழன் ,ஆசிரியர் ராஜமோகன் உள்பட பலர் கலந்து கொண்டனர். கள்ளிப்பட்டியாய் எழுவோம் இளைஞர்கள் நலக்குழு நிர்வாகிகள் வழக்கறிஞர் விஜி மணிவாசகம், கவிஞர் பிரியதர்ஷினி,கோடை பண்பலை அறிவிப்பாளர் ரங்கநாதன்,கவிஞர் அருண் அழகு, வங்கி மேலாளர் பழனியப்பன், திராவிடர் கழக நிர்வாகி சாமி ஸ்டிக்கர், விசிக மாவட்ட இளஞ்சிறுத்தைகள் மாவட்ட துணை அமைப்பாளர் இராவண வரதன், சமூக செயல்பட்டார்கள் கனி முத்து,முத்துவேல்,சத்தியசீலன் ஆகியோர் ஒருங்கிணைப்பு செய்தனர். நிகழ்ச்சியின் முடிவில் கள்ளிப்பட்டி கிராம நிர்வாக தலைவர் காளியப்பன் நன்றி கூறினார். தெ. கள்ளிப்பட்டி கள்ளிப்பட்டி அதி சிலம்ப ஆசான் அஜித்குமார் தலைமையில் சிறப்பு அழைப்பாளர்களுக்கு சிலம்பாட்டம் ஆடி வரவேற்பு அளித்தனர். இந்த புத்தக திருவிழாவில் 10,000 மேற்பட்ட புத்தகங்கள் பார்வைக்காகவும் விற்பனைக்காகவும் வைக்கப் பட்டன.


# ஒட்டன்சத்திரத்தில் புனரமைக்கப்பட்ட சட்டமன்ற அலுவலகத்தை ஊரக வளர்ச்சிதுறை திறந்து வைத்த அமைச்சர்

திண்டுக்கல் ஏப் 13



திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன் சத்திரத்தில் இ சேவை மையத் துடன் கூடிய புனரமைக்கப்பட்ட புதிய சட்டமன்ற அலுவலகத்தை ஊரக மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் உணவு-உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி





முன்னிலை வகித்தார்.மேலும் திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன், திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். சச்சிதானந்தம், வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் ச.காந்திராஜன், பழனி கோட்டாட்சியர் ஆர். சக்திவேல், ஒட்டன் சத்திரம் நகராட்சி ஆணையாளர் ஸ்வேதா, ஒட்டன் சத்திரம் வட்டாட்சியர் பழனிச்சாமி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் காமராஜ், வடிவேல் முருகன்,ஒட்டன் சத்திரம் நகர் மன்ற தலைவர் க.திருமலைச்சாமி,துணை தலைவர் ப.வெள்ளைச்சாமி, மாவட்ட அவைத் தலைவர் தி.மோகன்,மத்திய கூட்டுறவு சங்க தலைவர் ராஜாமணி, ஒன்றிய செயலாளர்கள் இரா.ஜோதீஸ்வரன்,க. தர்மராஜ், எஸ்.ஆர்.கே.பாலு ஒன்றிய அவைத்தலைவர் செல்வராஜ் ,நகர அவைத் தலைவர் சோமசுந்தரம், ஒன்றிய துணை செயலாளர்கள், முருகானந்தம், ராமசாமி,சிவா, உள்ளிட்ட முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள், நகர்மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாட்டில் குறைந்தபட்ச ஆதார விலையில் பச்சைப்பயறு உளுந்து கொள்முதல்! திருப்பூர் ஆட்சியர் தகவல்

திருப்பூர் ஏப்13



திருப்பூர் மாவட்டம் விவசாயிகளின் விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைத்திடவும், அவர்களின் வருவாயினை பெருக்கிடவும், தமிழக அரசு பல்வேறு உழவர் நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டில், பச்சைப்பயறு மற்றும் உளுந்து சாகுபடி செய்த விவசாயிகள் பயன்பெறும் வகையில் அவர்கள் விளைவித்த பச்சைப்பயறு மற்றும் உளுந்து ஆகியனவற்றை மத்திய அரசின் தேசிய வேளாண்மை கூட்டுறவு விற்பனை (National Agricultural Co-operative Marketing Federation) இணையத்தின் மூலம், விலை ஆதரவு திட்டத்தின் கீழ், குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. இதன்படி, திருப்பூர் மாவட்டத்தில் முறையே 10 மெ.டன் மற்றும் 350 மெ.டன் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு உடுமலைப்பேட்டை ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் முதன்மை கொள்முதல் நிலையமாக செயல்பட உத்தரவிடப்பட்டுள்ளது. இம்மையத்தில் நியாயமான சராசரி தரத்திற்கு கிலோ ஒன்றுக்கு பச்சைப்பயறு ரூ.86.82 மற்றும் உளுந்து ரூ.74.00 என்ற விலைக்கு 2025 ஆம் ஆண்டில் 15.03.2025 முதல் 12.06.2025 முடிய கொள்முதல் செய்யப்படவுள்ளது. மேலும், விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் பச்சைப்பயறு மற்றும் உளுந்து ஆகியனவற்றிற்கான கிரையத் தொகை விவசாயிகளின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக செலுத்தப்படும்.

இத்திட்டத்தின் மூலம் கொள்முதல் செய்யப்படவுள்ள பச்சைப்பயறு மற்றும் உளுந்து கீழ்காணும் விவரப்படி நியாயமான சராசரி தரத்தினை (Fair Average Quality) கொண்டிருத்தல் வேண்டும்.

1. அயல் பொருட்கள் கலப்பு, 2%, 2. இதர தானியங்கள் கலப்பு 3%, 3. சேதமடைந்த பருப்புகள் 3%,4.சிறிதளவு சேதமடைந்த பருப்புகள், 4%, 5. முதிர்வடையாத மற்றும் சுருங்கிய பருப்புகள் 3%, 6. வண்டுகள் தாக்கிய பருப்புகள் 4%, 7.ஈரப்பதம் 12% இத்திட்டத்தின் மூலம் பயன்பெற விரும்பும் விவசாயிகள், சிட்டா, அடங்கல், ஆதார் எண், மற்றும் வங்கி கணக்கு எண் ஆகிய விவரங்களுடன் உடுமலைப்பேட்டை ஒழுங்கு முறை விற்பனைக்கூடத்தில் (கைபேசி எண்: 9443962834), முன்பதிவு செய்துகொள்ள கேட்டுகொள்ளப்படுகிறது.

எனவே, பச்சைப்பயறு மற்றும் உளுந்து சாகுபடி செய்துள்ள திருப்பூர் மாவட்ட அனைத்து விவசாயிகளும் இந்த நல்ல வாய்ப்பினை பயன்படுத்திக்கொண்டு தங்களது விளைபொருளுக்கு அதிக விலை பெற்று பயன்பெற மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக்கொள்கிறார். மேலும் விவரங்களுக்கு முதுநிலை செயலாளர் / வேளாண்மை துணை இயக்குநர், திருப்பூர் விற்பனைக்குழு, திருப்பூர் ( 04212213304 மற்றும் கைபேசி எண்: 8667543113) அவர்களை தொடர்புகொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் தெரிவித்துள்ளார்கள்.



திருப்பூர் மாநகராட்சி மாநகர மேயர் ந.தினேஷ்குமார் தலைமையில் தூய்மை பணியாளர்களை தொழில் முனைவோராக மாற்றும் திட்டத்தின் மூலம் மாநகராட்சி பணிகளுக்காக கழிவு நீர் அகற்றும் 6,000லிட்டர் கொள்ளளவு கொண்ட வாகனத்தை கொடியசைத்து துவக்கிவைத்தார். உடன் துணை ஆணையாளர் சுந்தர்ராஜன், 2வது மண்டல தலைவர் தம்பிகோவிந்தராஜ், மாநகராட்சி அலுவலர்கள்,நிதி வழங்கும் வங்கி அதிகாரிகள் உட்பட பலர்உள்ளனர்.



தேனி மாவட்டம் வீரபாண்டி அருகே உள்ள கோடாங்கி பட்டியில் ஸ்ரீ காளியம்மன் கோவில் பங்குனி உற்சவ திருவிழாவில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தேனி கிழக்கு மாவட்டம் தேனி ஒன்றிய செயலாளர் ராஜதுரை தலைமையில் ஊர்வலமாக வந்த பக்தர்களுக்கு நீர்மோர் வழங்கப்பட்டது.




டாஸ்மாக் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு மதுரை மாவட்டம் சார்பில் பணி நிரந்தரம் காலமுறை ஊதியம் பணியாளர்களுக்கு முறையான நிலையானை அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் போன்ற பணியாளர்களின் நீண்ட நாள் கோரிக்கைகளை நடப்பு சட்டமன்ற கூட்டத்தொடரில் நிறைவேற்றுத் தர வலியுறுத்தி கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம், மாநில பொதுச் செயலாளர் பாலமுருகன் தலைமையில் மாநிலத் துணைத் தலைவர் ராமர் முன்னிலையில் நடைபெற்றது. டாஸ்மாக் தமிழ்நாடு அரசு பேரூராட்சி பணியாளர்கள் சங்கத்தின் மாநில தலைவர் பிச்சைமுத்து சிறப்புரை நிகழ்த்தினார். மற்றும் அருண்குமார், கனகராஜ், விர்மன், ராமச்சந்திரன், மாநில பொதுச் செயலாளர் பாண்டியன் மற்றும் மண்டலத் தலைவர் அருண்குமார் நாகராஜ் அங்குவேல் பிரபு தவசி பாண்டி ராஜா நாகராஜன் உட்பட ஏராளமானவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

# சோழவந்தானில் திமுக சார்பில் நீர் மோர் பந்தல் வெங்கடேசன் எம்.எல்.ஏ தொடங்கி வைத்தார்



சோழவந்தான் ஏப்.13

மதுரை மாவட்டம் சோழவந்தானில் கோடை வெப்பத்தை தணிக்கும் வகையில் திமுக சார்பில் நீர் மோர் பந்தல் திறக்கப்பட்டு நீர் மோர் சர்பத் இளநீர் தர்பூசணி பப்பாளி வெள்ளரி போன்ற கோடை கால குளிர்பானங்கள் பழங்கள் பொது மக்களுக்கு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது இதில் சோழவந்தான் வெங்கடேசன் எம் எல் ஏ கலந்து கொண்டு நீர் மோர் பந்தலை தொடங்கி வைத்தார் வாடிப்பட்டி தெற்கு ஒன்றிய செயலாளர் பசும்பொன்மாறன் பேரூராட்சித் தலைவர் எஸ் எஸ் கே ஜெயராமன் பேரூர் செயலாளர் வழக்கறிஞர் சத்திய பிரகாஷ் துணைத் தலைவர் லதா கண்ணன் பொதுக்குழு உறுப்பினர் ஸ்ரீதர் இளைஞர் அணி வெற்றிச்செல்வன்பேரூர் துணைச் செயலாளர் ஸ்டாலின்வார்டு கவுன்சிலர்கள் கொத்தாலம் செந்தில் வேல் குருசாமி முத்துச்செல்வி சதீஷ் சிவா செல்வராணி பிற்பட்டோர் நல வாரிய உறுப்பினர் பேட்டை பெரியசாமி முன்னாள் பேரூர் செயலாளர் முனியாண்டி அவைத் தலைவர் தீர்த்தம் என்ற ராமன் கேபிள் ராஜாமாணவரணி எஸ் ஆர் சரவணன் வார்டு பிரதிநிதி சங்கங்கோட்டை சந்திரன் ரவி ராமநாதன் கண்ணதாசன் பொருளாளர் எஸ் எம் பாண்டியன் உள்பட பலர் கலந்து கொண்டனர்



மதுரை சித்திரை திருவிழா முன்னேற்பாடு பணிகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சௌ.சங்கீதா தலைமையில் நடைபெற்றது. மாநகர காவல் ஆணையாளர் லோகநாதன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பி.கே.அர்விந்த் ஆகியோர் உடன் உள்ளனர்.

# மாடபாக்கத்தில் பாரதியார் நகர் குடியிருப்போர் நலச்சங்கம் சார்பில் பொதுமக்களுக்கு 2 டன் தர்பூசணி பழங்கள் இலவசமாக வழங்கல்



மாடம்பாக்கம் ஏப்13

தாம்பரம் அடுத்த மாடம்பாக்கத்தில் மாடம்பாக்கம் பாரதியார் நகர் குடியிருப்போர் நலச் சங்கம் சார்பில் கோடை வெயிலில் இருந்து பொதுமக்களை காக்கும் வகையில், பங்குனி உத்திரத்தை முன்னிட்டும்

பொதுமக்களுக்கு தர்பூசணி வழங்கும் விழா வெகு சிறப்பாக இன்று நடைப்பெற்றது.

மாடம்பாக்கம் பெரியார் நகர் குடியிருப்போர் நலச்சங்கம் தலைவர் சின்னப்பன், பொதுசெயலாளர் சீனிவாசன், பொருளாளர் தங்கத்துரை ஆகியோர் பொதுமக்களுக்கு தர்பூசணிகளை வழங்கினர். சுமார் 2 டன் எடை கொண்ட தர்பூசணி பழங்களை 500க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு வழங்கினர். சுட்டெரிக்கும் கோடை வெயிலில் வெளியே வந்த மக்கள் மிகுந்த சந்தோஷத்துடன் தர்பூசணி பழங்களை வாங்கி சாப்பிட்டனர்.

அதன் பின்னர் செய்தியாளர்களிடம்பேசிய பாரதியார் நகர் குடியிருப்போர் நலச்சங்க பொதுச்செயலாளர் சீனிவாசன் கூறும்போது, தர்பூசணிபழம் குறித்துதவறான தகவல்களை பரப்பியதால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் விவசாயிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலும், தர்பூசணியால் எந்த பாதிப்பும் இல்லை

இல்லை என்பதை உணர்த்தும் வகையில் இன்று மக்களுக்கு தர்பூசணி பழம் வினியோகிக்கப்பட்டதாக தெரிவித்தார்..



தேனி மாவட்டம் உத்தமபாளையம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளர் சுந்தரபாண்டியன் தலைமையில் சமத்துவ நாள் உறுதிமொழி ஏற்கும் நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் சமத்துவ நாள் குறித்து சாதி வேறுபாடுகளுக்கு எதிராகவும் பெயரால் நடக்கும் சமூக அடக்கம் முறைகளுக்கு எதிராகவும் தொடர்ந்து போராடி ஒதுக்கப்பட்ட அவர்களுடைய உரிமைக்காகவும் ஒடுக்கப்பட்டவர்களுடைய சமுதாயத்திற்காகவும் வாழ்நாள் எல்லாம் குரல் கொடுத்து ஏழை எளிய மக்களின் உரிமைகளை பற்றி விழிப்புணர்வை ஊட்டிய நம் அரசியல் அமைப்பு சட்டத்தை வகுத்து தந்து அண்ணல் அம்பேத்கார் அவர்களுடைய பிறந்த நாளில் சாதி வேறுபாடுகள் எதுவும் இன்றி சமத்துவத்தையும் சகோதரத்துவையும் அமைக்கும் விதமாக நாம் அனைவரும் ஒன்றிணைந்து பாடுபடுவோம் என உறுதிமொழி எடுத்தனர்

## நாகையில் குற்ற வழக்குகளில் கைப்பற்றப்பட்டுள்ள வாகனங்கள் பொது ஏலம்

நாகப்பட்டினம், ஏப்.13



நாகை மாவட்டத்தில் மது விலக்கு குற்ற வழக்குகளில் கைப்பற்றப்பட்டுள்ள 131 வாகனங்கள் வெளிப் பாளையம் காவல் நிலைய வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. வருகின்ற 14 ந்தேதி அன்று காலை 08.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை வாகனங்களை நேரில் பார்வையிட்டு கொள்ளலாம்.

வருகின்ற 15 ந் தேதி காலை 10.00 மணி முதல் வாகனங்கள் பொது ஏலத்தில் விடப்படும். அன்றைய தினத்தில் ஏலம் எடுக்க விரும்புவர்கள் ஆதார் அட்டை அல்லது வாக்காளர் அடையாள அட்டையுடன் நேரில் ஆஜராகி தங்களது பெயர் விலாசத்தினை காலை 08.00 முதல் 09.00 மணிக்குள் பழைய வெளிப்பாளையம் காவல் நிலையத்தில் வாகனம் ஏலம் விடும் குழுவிடம் பதிவு செய்து கொள்ள வேண்டும். பொது ஏலம் மூலம் அதிக விலை கோரும் நபர்களுக்கு வாகனங்கள் வழங்கப்படும். மேலும் ஏலம் எடுத்த வாகனங்களுக்கான தொகையினை உடனுக்குடன் செலுத்தி வாகனங்களை பெற்றுக் கொள்ளவேண்டும். மேலும் விபரம் அறிய தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்:

0436524743 மேற்கண்ட தகவலை போலீஸ் சூப்ரண்ட் ஏ.கே. அருண் கபிலன் தெரிவித்துள்ளார்.

# காசநோய் இல்லாத பஞ்சாயத்துக்கள்-காசநோய் சிகிச்சை அளிப்பதில் சிறப்பான பங்களிப்பை வழங்கிய அரசு, தனியார் மருத்துவர்களுக்கு சான்றிதழ்கள் கேடயம்

சிவகங்கை ஏப்13



சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் தேசிய காசநோய் ஒழிப்பு திட்டத்தின் கீழ் உலக காசநோய் தின அனுசரிப்பு நிகழ்ச்சி மாவட்ட ஆட்சயர் ஆஷா அஜித், தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் போது, மாவட்ட ஆட்சியர் தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களின் உடல் நலத்தினை பேணிக்காத்திடும் பொருட்டு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி, பொதுமக்களின் நலன் காத்து வருகிறார்கள். அதனடிப்படையில், காசநோய் ஒழிப்பு குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திடும் பொருட்டு, பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் தமிழகம் முழுவதும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி, உலக காசநோய் தினமாக மார்ச் 24ஐ முன்னிட்டு, மாநிலம் முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2025க்குள் காசநோய் இல்லாத தமிழகமாக மாற்றுவதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் இலக்கு நிர்ணயித்து, பல்வேறு விழிப்புணர்வுநடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். அரசு அலுவலகங்களில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பள்ளியில் உள்ள ஆசிரியர்கள், மாணவ, மாணவியர்கள் ஆகியோர் இது குறித்து போதிய விழிப்புணர்வுடன் இருந்து தங்களை சார்ந்தவர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும்.

காசநோய் உள்ளவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ளதால் அதிக ஊட்டச்சத்து உணவினை எடுத்துக் கொள்ள வேண்டும். அவர்களுக்கு அரசால் மாதாந்திர உதவித்தொகையும் வழங்கப்படுகிறது. இதுதவிர, தன்னார்வலர்களும் தங்களது பங்களிப்பை ஏற்படுத்திடும் வகையில், அரசுடன் இணைந்து சிறப்பாக செயல்பட்டு வருவது பாராட்டுக்குரியதாகும்.

சிவகங்கை மாவட்டத்தில் 51 காசநோய் கண்டறியும் நுண்ணோக்கி மையங்கள் உள்ளன. மேலும், 08 புதிய பன் மருந்து எதிர்ப்பு காசநோய் கண்டறியும் கருவிகள் மாவட்டத்தில் பல்வேறு அரசு மருத்துவமனைகள் மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் பொதுமக்களின் உபயோகத்திற்கென தற்போது வழங்கப்பட்டுள்ளது.

கடந்த நான்காண்டுகளில் 15,295 சளிப்பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, அதில் கண்டறியப்பட்ட 6,298 காசநோயாளிகளில் 5,942 நோயாளிகள் சிகிச்சை பெற்று, முழுமையாக குணமடைந்துள்ளனர். காசநோய் கண்டறியும் நடமாடும் எக்ஸ்ரே வாகனம் ஒன்றும் நமது மாவட்டத்திற்கு கடந்த ஜூலை’2022 ஆம் ஆண்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரால் வழங்கப்பட்டு தற்போது பொதுமக்களின் பயன்பாட்டிற்கு செயல்பாட்டில் உள்ளது.

மேலும், “நிக்‌ஷை போஷன் யோஜனா” திட்டத்தின் கீழ் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுகிற காசநோயாளிகளுக்கு ஊட்டச்சத்து உதவியாக மாதம் ரூ.1,000/ வீதம் சிகிச்சை பெறும் காலத்தில் 6,278 நோயாளிகளுக்கு ரூ.1,56,95,000/ மதிப்பீட்டில் அவர்களின் வங்கி கணக்கில் நேரடியாக செலுத்தப்பட்டுள்ளது.

அதுமட்டுமின்றி காசநோயாளிகளில் மிகுந்த பாதிப்புக்குள்ளான நோயாளிகளை தத்தெடுத்து அவர்களின் சிகிச்சைக் காலம் முழுவதும் அவர்களுக்குத் தேவையான ஊட்டச்சத்து உணவுப் பொருட்கள் வழங்கிடும் வகையில் “நிக்‌ஷை மித்ரா” எனும் கொடையாளர்கள் கண்டறியப்பட்டு அவர்களின் மூலம் காசநோயாளிகளுக்கு சிகிச்சை காலம் முழுவதும் சத்துள்ள உணவுப்பொருட்களும் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், பொதுமக்களின் ஒத்துழைப்பின் அடிப்படையில் காசநோயினை முற்றிலுமாக ஒழித்திடும் பொருட்டு, அனைத்துத்துறையைச் சார்ந்த அரசு அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணியாற்றி, காசநோய் இல்லாத மாவட்டமாக சிவகங்கை மாவட்டத்தினை உருவாக்குவதற்கான பணிகளை சிறப்பாகவும், துரிதமாகவும் மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சயர் ஆஷா அஜித், தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது, உலக காசநோய் தினத்தை முன்னிட்டு காசநோய் இல்லாத பஞ் சாயத்துக்கள் மற்றும் காசநோய் சிகிச்சை அளிப்பதில் சிறப்பான பங்களிப்பை வழங்கிய அரசு, தனியார் மருத்துவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் கேடயங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், இணை இயக்குநர் (மருத்துவப்பணிகள்) மரு.தர்மர், துணை இயக்குநர்கள் மரு.வெள்ளசாமி (காசநோய்), மரு.எஸ்.கவிதாராணி (தொழுநோய்), மாவட்ட சுகாதார அலுவலர் மரு.எஸ்.மீனாட்சி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) கேசவதாசன், நலக்கல்வியாளர் கே.வெள்ளைச்சாமி மற்றும் மற்றும் மருத்துவத்துறையைச் சார்ந்த மருத்துவர்கள், செவி லியர்கள், பணியாளர்கள், அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

Printed , published by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161